LIBRARY
25 NOV 1968
STATE LEGISLATURE, MADRAS

தமிழக சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை 1968 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1.—வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் வெளியே போக இருக்கிற காரணத்தால் வினா எண் 225 முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

Bonus to textile workers

* 225 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether the managements of textile mills in Coimbatore represented by the Southern India Mill Owners' Association and Trade Union representatives have arrived at an agreement on the payment of bonus to textile workers for the year 1966–67; and

(b) if so, the details of this settlement?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 86 நூற்பாலைகள் இவ்வொப்பந்தத்திற்கு உடன்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய போனஸ் தொகை, ஒவ்வொரு தொழிலாளியின் மொத்த ஊதியத்தில் 4 சதவிகிதத்திலிருந்து 16·7 சத விகிதம் வரையில் ஒவ்வொரு ஆலைக்கும் தனித் தனியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: இப்போது கோயம்புத்தூரில் இருக்கிற மில்களை 15 நாட்களாக மூடிவிட்டிருப்பதாக முதலாளிகள் அப்படி ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன், இது உண்மையா? இதனால் எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை இதைப் பற்றி ஏற்கெனவே நடது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் அனுப்பப்பட்டு அதை அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தம் கிடையாது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தொழிலிலே ஏற்பட்டிருக்கின்ற தேக்கத்தைப் போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவற்றை செய்து வருகிறோம் என்று ஏற்கெனவே தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதில் கைத்தறி போர்டு அதிகாரியும் அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதிலே லேபர் கமிஷனரையும் மற்ற அதிகாரிகளையும் கவனம் செலுத்தச் செய்தால் நலமாக இருக்கும் என்பதால் அவர்களையும் கலந்துகொண்டு ரிபோர்ட்டு கொடுக்கும்படி ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிலிலே ஏற்பட்டிருக்கின்ற தேக்கத்தைப் பரிசீலித்து நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வதற்கு அந்த அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பாதகமான சூழ்நிலை ஏதாவது ஏற்படுமானால் அதை எப்படித் தடுப்பதற்கு முயற்சி எடுகக வேண்டும் என்பது பற்றி நம்முடைய தொழிலாளர் இலாக்கா கவனம் செலுத்தும்.

திரு. கே. விநாயகம்: தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதிலே மில் அதிபர்களுக்கும் தொழிலாளர்கள் அசோசியேஷன்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் விளைவாக வேலைக்குத் திரும்பினார்களா? தகராறு வந்ததற்குப் பின் மூடப்பட்டது. அதற்குப்பின்தான் திறக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மில்கள் மூடப்பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இப்போது தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடக்கும். இந்த ஆண்டு இது சம்பந்தமாக கோவை மாவட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து எல்லோருடைய சம்மதத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஒப்பந்தம் ஏற்படும்போது மில்களில் லாப நஷ்ட கணக்குப் பார்க்கப்பட்டதா? மில்களில் எவ்வளவு லாபம் இருந்தது என்பதை அரசாங்கம் ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. போனஸ் சட்டம் என்று மத்திய சட்டம் இருக்கிறது. போனஸ் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு என்ன போனஸ் கொடுக்க வேண்டுமென்பது பற்றி பார்முலா இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் லாபத்திலே எவ்வளவு பங்கு, எப்படிப் பிரித்து கொடுப்பது, ஒவ்வொரு தொழிலாளருக்கும் எவ்வளவு, தொழிலாளர்களுக்கு வேறு தொழில்கள் கொடுப்பது என்பதுபற்றியெல்லாம் பரிசீலிக்கபபடுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சுமுகமான தீர்வு காண்பது என்பது நாம் எல்லோருமே வரவேற்கக்கூடிய அம்சம் என்றபோதிலும் மூடி இருக்கின்ற மில்கள் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் மூடப்பட்டிருக்கிற காரணத்தால் தொடர்ந்து லேஆப் கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லையென்றால் தொடர்ந்து கொடுக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதைப் பற்றி ஏற்கெனவே தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட மில்களைப் பற்றிக் கேட்டால் அதற்குப் பதில் அளிக்கலாம்.

பாடப்புத்தக வெளியீடு

* 218 வினா—திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :
திரு. வை. சுவாமிநாதன்: } மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—